


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயத்

ஜமீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆயத் (கவிதை தொகுதி)**

ஜமீல் ©

முதல் பதிப்பு: டிசம்பர் 2022

**புதுப்புனைவு பதிப்பகம்**

124 ஏ, ஸ்டார் வீதி,

பெரிய நீலாவணை – 01

மருதமுனை,

இலங்கை

தொலைபேசி: +94 077 9689392

அட்டைப்படம்: லார்க் பாஸ்கரன்

வடிவமைப்பு: நஸார் இஜாஸ்

**Aayath (Collection of Poems)**

*Jameel ©*

*First Edition: December 2022*

***Puthupunaivu Publication***

*124 A, Star Road,*

*Periya Neelavanai - 01*

*Maruthamunai,*

*Sri Lanka*

***Wrapper Design:*** *Lark Baskaran*

***Layout:*** *Nasar Ihjas*

***Price:*** ***Rs. 600***

*ISBN: 978-624-98763-3-0*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயத் / ஜமீல்

இயற்பெயர் அப்துல் ரகுமான் அப்துல் ஜமீல். கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மருதமுனை பிரதேசத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

தற்போது அதே பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமை புரிந்து வருகிறார். 1990 களிலிருந்து ஆக்க இலக்கிய செயல்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட இவர், இதுவரை 09 கவிதை பிரதிகளை வெளியீடு செய்துள்ளார். இது இவருடைய பத்தாவது தொகுதியாகும்.

124 ஏ, ஸ்டார் வீதி,
பெரிய நீலாவணை – 01
மருதமுனை
இலங்கை

கைபேசி: +94 077 9689392
ஈமெயில்: jameel2013a@gmail.com
பேஸ்புக்: Abdul Jameel



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன்பும் தீரா நன்றியும்

வனம், நடு, நெய்தல், கொலுசு, காற்றுவெளி, கோடுகள், காமதேனு ஆகிய மின்னிதழ்களுக்கும்

படிகள், கலைமுகம், ஜீவநதி, அல் – ஹஸனாத், வழித்தடம், காற்புள்ளி, இலக்கிய வெளி ஆகிய சிற்றிதழ்களுக்கும்

தினகரன், தமிழன், தினக்குரல், தீம்புனல், வீரகேசரி முதலான பத்திரிகைகள்

நஸார் இஜாஸ், லார்க் பாஸ்கரன், அபூபக்கர் நஜீம், ந. முகம்மது பயாஸ், ஏ.எம். குர்ஷித், டீன் கபூர், கதன், அலறி, ஜே. பிரோஸ்கான், ஏ. நஸ்புள்ளா அம்ரிதா ஏயெம், நௌபல், றியாஸ் குரானா, தில்லை, சாஜித் அகமட், சிராஜ் மஷ்ஹூர், தமயந்தி சைமன், லறீனா அப்துல் ஹக்

உடன்பிறப்புகளான சமட், ஜவாத், கபீழ், அன்சார், மஸீக் அத்தோடு அன்பு பிள்ளைகள் றபா அகமட், ஷரீன், ஹயா, மைத்துனர் ஜே.எம். நௌபாஸ் விஷேடமாக என் இணை நௌஸிலாவிற்கும் சொல்ல மறந்தவர்களுக்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்று சொல்லத் தெரியவில்லை
இது தோழர் ஏ. நஸ்புள்ளா அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்களை அறிமுகம் செய்தல்

**– ஜமீல் –**

முதன் முதலாக சந்திக்கும் மனிதர்களை அறிமுகம் செய்வது போன்று சந்தைக்கு வரும் புத்தகங்களையும் அறிமுகம் செய்ய நேரிடுகின்றது. அதன் ஒளியையும் இருளையும் அரங்கமைத்து நீண்ட நேரம் பேசித் தீர்க்கிறோம். சில சமயம் ஒரு மண்ணும் இல்லையென்று முற்றாக நிராகரிக்கிறோம். ஆனால், மனிதர்களை அவ்வாறு அறிமுகம் செய்ய ஒரு போதும் முடிவதில்லை. தவறு செய்தவர்களென்று பகிரங்கமாக தெரிந்திருந்தும் அவர்களது மிக நல்ல பக்கங்களை மட்டுமே சிறு உறுத்தலுமின்றி அறிமுகம் செய்கிறோம். முறைகேடாக அறிமுகம் செய்தும் நம்மை நிராகரிப்பதுமில்லை, பழி தீர்ப்பதுமில்லை புத்தகங்கள். மாறாக, நாம் பறப்பதற்கு சாத்தியமான எல்லாச் சிறகுகளையும் பரிசளிக்கிறது. புத்தகங்கள் போலல்ல மனிதர்கள். அடைக்கலம் அளித்த அதே இரவில் குருவி போல சம்பாதித்த வாழ்வை மீதம் வைக்காமல் அப்படியே திருடிச் செல்வார்கள். அறிமுகம் செய்யும் போது ஒரு பக்கத்தை மட்டுமே காட்ட முடிந்த மனிதர்களால் இதை தவிர வேறென்ன சாதிக்க முடியுமென கருதுகிறீர்கள். அறிமுகம் செய்யும் போதெல்லாம் ஒவ்வொரு பக்கமாக தன்னை திறந்து காட்டத் தயங்குவதில்லை புத்தகங்கள்.

2022.11.22
இரவு 10.30 மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயத்தின் பக்கங்களை புரட்டுதல்


- மின்மினிகளின் வனம் ........ 01
- பூக்களின் நிறங்களில் ஒளிரும் சிறுமியின் புன்னகை 02
- எனக்குள் விரியும் ஹயாவின் வனம் ........ 03
- நம்பிக்கையின் சிறகுகள் ........ 04
- கனவுகளின் விளைநிலம் ........ 05
- மேய்ப்பாளன் ........ 06
- காணாமல் போன உம்மாவின் தூக்கணம் ........ 07
- மறந்து வைத்தல் ........ 08
- ஓவியமாகிய சொற்கள் ........ 09
- அலையென்பது கடலின் வீச்சருவா மீசை ........ 10
- மறுக்கப்பட்ட எனது வானம் ........ 11
- வதைபடும் நிலவு ........ 12
- நிலவின் துயிலறியாப் பறவைகள் ........ 13
- கைம்மாறு ........ 14
- மழைக் குணம் ........ 15
- குளத்தை எழுதித் தீர்த்தல் ........ 16
- நினைவுகள் பறவை போன்றது ........ 17
- நதியின் பெயர் ஹயா ........ 18
- வனத்தில் வசிக்கும் சிறுமி ........ 19
- சொற்களுக்கு பிடித்த மழை ........ 20
- பறவையின் மனசு ........ 21
- ஏவி விடப்பட்ட சொல் ........ 22
- ஹயாவின் கன்னத்தில் விரிந்த பறவையின் ஆகாயம் 23
- ஆதி நிலம் ........ 24
- வாழ்வை இனிப்பூட்டும் மாங்கனி ........ 25
- பூனையின் பிரிவின் துயர் ........ 26
- கதைகளின் மரம் ........ 27
- காற்றை கட்டி வைத்து அடிக்கும் சிறுமி ........ 28
- வருந்தும் நதி ........ 29
- உலர் செம்மீன் ........ 30
- கோடை மழை ........ 31
- தூண்டிலில் நெளியும் நிலா ........ 32




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீண்டு செல்லும் முறுகல் ........ 33
- உம்மாவின் சிறகுகளால் பறப்பவன் ........ 34
- சொற்களை வடிகட்டாமல் அருந்தும் குழந்தைகள் ........ 35
- எறும்பாக இருத்தல் ........ 36
- என்னை இழுத்துச் செல்லும் நிழல் ........ 37
- வானத்தை பறி கொடுத்த பறவை ........ 38
- சிறுமியின் கடல் ........ 39
- முறிந்த சிறகுகள் ........ 40
- முறைக்கும் ஓவியம் ........ 41
- ஹயாவின் மனசின் கூட்டில் வளரும் பறவைகள் ........ 42
- இரவின் வன்மம் ........ 43
- அழுகை என்ன மொழி ........ 44
- தொலைதலின் துயரம் ........ 45
- சிறுமிக்கு தாயின் பாசம் ........ 46
- சாயல் ........ 47
- ஒரு யானை என்பது ........ 48
- விதையினுள் உறங்கும் வனம் ........ 49
- பழி போடுதல் ........ 50
- நம்பிக்கையின் சிறகுகள் ........ 51
- கண்கள் பேசும் மொழி ........ 52
- நினைவுகளோடு பழகுதல் ........ 53
- எடுபடா கர்வம் ........ 54
- மழையில் நனையும் தேநீர் ........ 55
- ஆயுள் ஒரு கண்ணாடி ........ 56
- பிரதியினுள் மாட்டித் தவித்தல் ........ 57
- சாத்தியமற்றது தனிமை ........ 58
- இருளை வாசிக்கும் குழந்தைகளின் சிரிப்பு ........ 59
- நான் நதி ........ 60
- புத்தகம் வாசிக்கும் காற்று ........ 61
- வாழ்வை எழுதும் சருகு ........ 62
- ஒழுக்கமான மரங்கள் ........ 63
- பறவையாகும் மனிதன் ........ 64
- ஈதல் ........ 65



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்மினிகளின் வனம்

சில்லூறிகளும் இசை மீட்கா
இக் கோடை இரவினில்
கும்மிருளில் மூழ்கி
மௌனமாக கிடக்கிறது வீடு

வளர்ப்பு முயலின் கண்கள்
இரண்டு பனித்துளிகள்
அருகருகில் இருப்பது போன்று
ஒளிர்வதாக சொல்கிறாள் ஹயா

வீட்டின் இருளை வாசிக்கவென
உடன் மின்மினி பூச்சிகள் சிலதை பிடித்து
கண்ணாடிக் குடுவையில் அடைத்து
ஹயாவின் அறையில் வைக்கிறேன்

அது பிரகாசமாய் ஒளிர்ந்த போதும்
மூச்சுத் திணறி இறந்துவிடலாமென
அஞ்சி பச்சாதாபப்பட்டு
தாமதியாது திறந்து விடுகிறாள்

அறையெங்கும் விண்மீன்களென
பறந்து திரியும் மின்மினிகளோடு
அவளும் ஒரு மின்மினியென
அலாதியாகப் பறந்து திரிந்தாள்

சந்தோசத்தின் உச்சத்தில்
அவள் இதழ் வழிந்த சிரிப்பு
அறையெங்கும் ஒளியெனப் பெருகி
மின்மினிகளின் வனமானது வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்களின் நிறங்களில் ஒளிரும் சிறுமியின் புன்னகை

பூக்கள் விற்கவென
ஒவ்வொரு விடி காலையும்
கோயில் வாயிலில்
ஒரு பூவைப் போன்று பிரசன்னமாகிறாள் சிறுமி

ஆயிரம் கதைகள் சொல்லும்
சிறுமியின் கண்கள்
உலகின் மிகச் சிறந்த மலர்களாக ஒளிர்ந்தன

தட்டிலிருக்கும் பூக்களின்
கண்களை பறிக்கும் நிறங்கள்
வாடி உதிர்வதற்கு முன்பாக
பூக்களை விற்றுத் தீர்த்தாக வேண்டுமென்பதில்
அதீத அக்கறை கொண்டிருந்தாள்

தவறும் பட்சத்தில் அன்றைய பொழுதின்
புன்னகை பூக்கள்
வாடி உதிர்ந்து விடலாமென்பதனை
அவள் அறியாமலில்லை

பூக்கள் வாங்கினால்
மூக்கை துளைக்கும் வாசனையை
இலவசமாக வழங்கினாள் சிறுமி

இத்தனைக்கு மத்தியிலும்
தட்டிலிருக்கும் பூக்கள் உதிர்வதற்கு முன்பாக
சிறுமியின் புன் சிரிப்பை உதிர்த்து விட
தோதான தருணத்திற்காக
பதுங்கித் திரிகின்றன வாலாட்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்குள் விரியும் ஹயாவின் வனம்

யாருமே கவனிக்காதபடி
வீட்டு முன்றலில்
நாலைந்து நாட்களாக
மிதிபட்டுக் கிடக்கிறது
பெயரறியா மரத்தின் விதையொன்று

அது பொருத்தமான
நிலம் தேடி தவிப்புறுவது
அதன் கண்களில் தெரிகிறது

உடன் அதை தனது விரலிடுக்கில்
சுமந்து செல்கிறாள் ஹயா

பின்னரதை குழி தோண்டிப் புதைத்து விட்டு
மரமொன்றை நட்டு விட்டு வருவதாக
புன்னகை சொரிந்தபடி
உரக்கச் சப்தமிட்டு சொல்கிறாள்

எல்லையற்ற சந்தோசத்தின் உச்சத்தில்
அவள் இதழ் வழிந்த புன்னகை
எனக்குள் அடர் வனமாக விரிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கையின் சிறகுகள்

முடிவுறும் தறுவாயிலிருக்கும்
இரவினை திறந்து
இரை தேடிச் செல்கின்றன பறவைகள்

அவ்வாறு கூட்டை விட்டு
தமதன்றாட வாழ்வை சம்பாதிக்கவென
தீரா வேட்கையுடன்
சிறகை விரிக்கும் பட்சிகளானது
இரை இருக்கும் இடத்தினை
முன்னரே அறிந்து கொண்டோ
காத்திருக்கும் குஞ்சுகளுக்கு
நிச்சயமாக இரை ஊட்டுவோமென்றோ
அன்றி இறகெதுவும் உதிராமல்
மீளக் கூடடைவோமென்றோ
ஒரு போதும் வெளியேறிச் செல்வதில்லை

தவிரவும் தனதிறக்கைகளில்
திடமான தன்னம்பிக்கையினை மட்டுமே
அவை சுமந்து செல்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகளின் விளை நிலம்

எனது இருளை வாசித்த
முதல் மின்மினியே

என் கண்களைப் வசீகரித்த
கை கால் முளைத்த முதல் வானவில்லே

நான் மெய் மறந்து ரசித்த முதல் இசை
நின் அழுகைச் சத்தமடா மகனே

நான் வியந்து வாசித்த
முதல் கவிதையும் நீதானடா மகனே

நின்னை மேய்த்துச் செல்லவென
ஒரு இடையனாக
நியமிக்கப்பட்டிருக்கிறேன் நான்

எனது கண்களுக்குள் உன்னை வைத்திருப்பதனால்
எனது அரவணைப்பில் உன்னை வைத்திருப்பதனால்
எனது கண்காணிப்பில் உன்னை வைத்திருப்பதனால்
இன்னும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதனால்
என்னை ஒரு போதும் எதிரியாகவோ
சிறைச்சாலை அதிகாரியாகவோ
வேவு பார்க்கும் உளவாளியாகவோ
கருதி விடாதே செல்லமே

நான் எப்போதும் நீ விதைக்கும் கனவுகளின்
விளை நிலமாகவே இருப்பேனடா மகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேய்ப்பாளன்

ஆசிரியனிடம் ஒரு தொகை
மாணவர்கள் இருப்பதைப் போன்று
இடையனிடமும் ஒரு தொகை
மந்தைகள் இருக்கின்றன

ஆசிரியன் மாணவர்களை
வகுப்பறையில் மேய்க்கின்றான்
இடையன் ஆடுகளை
மேய்ச்சல் தரையில் மேய்க்கின்றான்

ஆசிரியனிடம் எப்போதும்
ஒரு பிரம்பு இருப்பதைப்போன்று
இடையனிடமும் ஒரு பிரம்பு
எப்போதும் இருந்துதான் வருகிறது

ஒரு மாணவனை நெறிப்படுத்தும் போது
இன்னுமொரு மாணவன்
குழப்படி செய்து கொண்டிருப்பான்

பிரிந்து சென்ற மந்தையினை
கூட்டத்தினுள் சேர்த்து விடும் போது
இன்னுமொரு மந்தை கூட்டத்தை விட்டும்
பிரிந்து சென்று கொண்டிருக்கும்

நீங்கள் எண்ணுவது போல மேய்ப்பதென்பது
அத்தனை சுலபமான காரியமல்ல

அதற்காக நமதாயுளை காலத்தினுலையில்
காய்ச்ச வேண்டி நேரிடுகிறது
அன்றி நிர்ப்பந்திக்கப்படுகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் போன உம்மாவின் தூக்கணம்

ஊருக்கு ஒதுக்குப்புறமாக
வானை முட்ட வளர்ந்து நிற்கும்
ஒற்றைப் பனை மரத்தில்
நாரிழையில் தொங்குகிறது
தூக்கணாங் குருவிக்கூடு
தனித்துத் தொங்கும்
அதனை முதன் முதலாக
கண்கள் இமைக்காது
அதிசயாமாகப் பார்த்து
வியந்து ரசிக்கிறாள் ஹயா
உடன் காணாமல் போன
வாப்பம்மாவின் ஒற்றை தூக்கணமென்று
சப்தமிட்டுச் சொல்கிறாள்
எனது கண்களுக்கும்
மரணித்துப் போன உம்மாவின்
காதுகளில் தொங்கி பளபளத்து மின்னிய
அதே தங்கத் தூக்கணம் போன்றுதான்
இடைக்கிடையே வீசும் காற்றில் ஆடி
உம்மாவை ஞாபகமூட்டுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறந்து வைத்தல்

என்னை தவறுதலாக
மறந்து வைத்து விட்டேன்

வீட்டின் நெருக்கடிகளுக்குள்
காரியால கோவைகளுக்குள்
தெருவை கடந்து செல்லும்
பருவப் பெண்ணின் புன்னகைக்குள்
அனாதரவாக கைவிடப்பட்ட
பூனைக் குட்டியின் கத்தலுக்குள்
இப்படி எங்காவது இருக்கலாம்

ஆனால் எங்கென்றுதான்
சரியாக ஞாபகம் இல்லை

மறந்து வைப்பதும்
பின்னர் தேடி அலைவுறுவதும்
கண்டெடுப்பதுமாக
சுழல்கிறது வாழ்க்கை

ஓயா அலைச்சலும் புலம்பலுமான
இந்த ஒரேயொரு ஆயுளை
வாழ்ந்து தீர்ப்பதற்குள்
இன்னும் எத்தனை தடவைகள்
என்னை மறந்து வைக்க நேரிடுகிறதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியமாகிய சொற்கள்

வாப்பாமார்களினது
மருண்ட விழிகளினையும்
ஓயா அதட்டுதல்களையும்
கண்டஞ்சி பயந்தொடுங்கி
சிறு புள்ளப் பூச்சியாகி
உம்மாமார்களினது
முந்தானை புதர்களுக்குள்
அவ்வப்போது ஓடி ஒளிந்து கொள்ளும்
அநேக சிறுவர்களினது பகிரப்படா
ஒரு கூடைச் சொற்கள்
அவர்களது அறைச் சுவர்களிலும்
சித்திரக் கொப்பிகளிலுமாக
வர்ணங்கள் குழைத்து வரைந்த
ஓவியமென சிரித்துக் கிடக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலையென்பது கடலின் வீச்சருவா மீசை

கடலின் கட்டுக்கடங்காமல்
காட்டு அரசன்போல கர்ஜிக்கும்
சிறியதும் பெரியதுமான
அலைகளை கண்டஞ்சி
ஒவ்வொரு முறையும் கால் கழுவாமல்
ஒடி ஒதுங்குகிறாள் ஹயா

பேரச்சம் போக்க திமிறும் அலைகளை
தூண்டில் போட்டு பிடித்து
துடிக்கப் பதைக்க
போத்தலில் அடைத்து விடுகிறேன்

இப்போது கடல் அலைகளின்றி
நதிபோல சாந்தமாகக் கிடக்கிறது

உடன் மீன் குஞ்செனெ நீந்தி
தெவிட்டும் வரை விளையாடி
தனது ஆவலை தீர்க்கிறாள்

அடித்துப் போட்ட ராட்சத சர்ப்பம்போல்
கடல் சுருண்டு கிடந்திடினும்
அதன் வீச்சருவா மீசைதான்
அலைகளென்பதனை ஹயா புரிந்திருக்க
ஒருபோதும் வாய்ப்பில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுக்கப்பட்ட வானம்

நான் இரஞ்சாமலும்
யாருமே பரிந்துரைக்காமலும்
எனக்கான எல்லாமே
தேவைக்கதிகமாகவே பரிசளிக்கப்பட்டன

எனக்கான சிறகுகள்
சிறியதும் பெரியதுமான காடுகள்
கடல் நதி குளமென
எல்லாமே அன்பளிப்பு செய்யப்பட்டன

ஆனால் எனக்கான
வானம் மட்டும் ஆதியிலிருந்தே
மறுக்கப்பட்டு வருகிறது

என்னதான் அரசர்கள்
தங்களது கிரீடத்தை பரிசளித்தாலும்
எல்லையற்ற வானத்தை வரையாத பட்சத்தில்
இந்த ராஜ குமாரனின் சிறகுகள்
எப்போதும் முறிந்த சிறகுகள்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதைபடும் நிலவு

மொட்டை மாடி வெளியில்
தழுவிச் செல்லும்
இதமான குளிர் காற்றில் கொடுகியவாறு
மிக அண்மையில்
வானொலியில் ஒலிக்கும்
பழைய பாடல்களை ரசித்தபடி
தனியாக ஓய்வெடுக்கிறேன்

உம்மா எனக்காக ஆவி பறக்க
தயாரித்து வைத்த தேநீர் கோப்பையில்
விழுந்து கிடக்கிறது
யானையின் உடைந்த தந்தமென நிலவு

காலடிக்கு வந்த நிலவை
வியந்து ரசிக்க முடிந்த என்னால்
தேநீரின் கடும் சூட்டில்
அது துடிதுடித்து வேகுவதை
உய்த்துணர முடியவில்லை

தேநீரின் கொதியடங்கி தனியும் வரை
கொதி மண்ணில் அம்புட்ட
மண் புழுவைப் போல
சுருண்டு துடிக்கிறது நிலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவின் துயிலறியாப் பறவைகள்

சிறு சலனமுமின்றி
நிசப்தமாகாக் கிடக்கிறது
கண்ணாடிக் குளம்

மீண்களின் இனிமையான பாடலில்
மெய் மறந்து
ஆழ்ந்து துயில்கிறது பால் நிலவு

அதன் உறக்கம்
கலைந்து விடலாமென்பது பற்றி
சற்றும் அறியாமலேயே
எச்சமிட்டுச் செல்கிறது
குளத்தை கடந்து செல்லும்
அநேக இரவுப் பறவைகள்

இடைக்கிடை எழும் பேரதிர்வால்
தூக்கம் தொலைத்து
இரவு துளித் துளியாய் ஒழுகொழுக
விழித்திருந்தது நிலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைம்மாறு

கொல்லன் உலையென
நிலம் கொதிக்கும்
நீள் கோடை தகிப்பினில்
நீங்கள் யாருக்கேனும்
ஒரு குடம் நீரை
அன்பளிப்பு செய்ய நினைத்திருந்தால்

தனது இலைகளை
காற்றின் கரங்களிடை பறி கொடுத்து
நிர்வாணமாய் நிற்கும் மரங்களுக்கு
மனமுவர்ந்து கொடுங்கள்

அதன் ஆணி வேரில்
கடைசிச் சொட்டு உயிரிருக்கும் கணம் வரை

ஒரு மழைத் துளியை
ஒரு அடை மழையை
ஒரு குளத்தை
ஒரு நதியை
நிச்சயம் உனக்கு கைம்மாறு செய்து
தனது நன்றியை சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைக் குணம்

குழந்தைப் பருவத்திலிருந்து
எடுத்து வளர்த்த
கண் விடுக்கா பூனைக் குட்டிபோல
குடை பிடித்த பின்பும்
முத்தம் கொடுத்தபடி
என் காலைச் சுற்றி கிடக்கிறது மழை

நான் அதனை மிதித்தவாறு
ஈரமின்றிச் செல்கிறேன்

அதுவும் என் காலில் தொங்கி
காடு மேடெல்லாம் இழுபட்டு
புழுதி குடித்தபடி வருகிறது

அதன் ஈரம் மீந்த குணம்
நம்மில் எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை

குடையை மடக்கி
அறை மூலையில் சாத்தி விட்டு
நாற்காலியில் அமர்கிறேன்

என் தோள்களில் புரள்கின்ற மழை
இனி என் மனசுக்குள் பெய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளத்தை எழுதித் தீர்த்தல்

குளம் பற்றிய கவிதையினை
அதன் ஆதி இயல்புடன்
ஒருவாறு எழுதித் தீர்க்கிறேன்

சொற்களில் புரண்டு வரும்
இதமான குளிர்க் காற்றை தழுவிட
கவிதையின் கரையில்
வந்தமரும் பறவைகளை
ஆழ்ந்து ரசிப்பதற்கிடையில்
ஒரு நுணல் நெஞ்சு பதைபதைத்து
கவிதைக்குள்லிருந்து பாய்ந்து
மீதமிருக்கும் சொற்களினுள் மறைகிறது

உடன் நுணலைப் மட்டும்
தனியாக அழைத்து விசாரிக்கிறேன்

குளத்தினுள் தீராப் பசியில்
அலைந்து திரிந்த பாம்பொன்று
தன்னை பிடித்துண்ண பதுங்கியதாக
அதன் மொழியில்
தொடை நடுங்கிச் சொன்னது

நுணலின்றி எங்கணம் பூர்த்தியாகும் குளம்
பாம்பின் பசியை ஆற்றிவிட்டு
மீளவும் நுணலினை குளத்தினுள் விடுகிறேன்

இப்போது சலனமின்றி கிடக்கிறது
அர்த்தம் சிதையா கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகள் பறவை போன்றது

என் பழைய நினைவுகளின்
அடுக்குகளிலிருந்து
ஒரு சம்பவம் தவறி விழுகிறது

அது விழுந்த இடத்திலிருந்து
சில ஒளி கீற்றுகளும்
சில கண்ணிர் துளிகளும் கூட
சிதறிக் கிடக்கின்றன

உடன் அதனை சேகரம் செய்து
வாசித்துப் பார்க்கிறேன்

என்னை விட்டும் பிரிந்து சென்ற
பள்ளித் தோழியின்
இறுதி வார்த்தைகள் அவை

அதனை எறிந்துவிட மனமின்றி
அதே நினைவுகளின் அடுக்குகளினிடை
மீளவும் சொருகி வைக்கிறேன்

அவை காலம் கடந்த பின்பும்
என் நெஞ்சில் இனிக்கக் கூடியது

நினைவுகள் பறவைகள் போன்றது
அது எப்போதும் மனசின் வெளியில்
பறந்து கொண்டே இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நதியின் பெயர் ஹயா

மேகத்தின் நிறங்கள் குழைத்து
நதி ஒன்றை வரைந்து முடித்து
அதற்கு ஹயா என்று பெயர் சூட்டுகிறேன்

இட்ட செல்லப் பெயரை
ஒரு முறைக்கு இரு முறை
சப்தமிட்டு அழைத்துப் பார்க்கிறேன்

எனது அழைப்பை செவியுறாது
கல்லில் முள்ளில் மோதி
வெள்ளை முயல் குட்டியென
துள்ளிக் குதித்தோடுகிறது நதி

அழைக்காத தருணங்களில்
நதிக்குண்டான ஆதிக் குணத்தோடு
மிகவும் சாந்தமாக நகர்கிறது

கூட்டம் கட்டமாய் தன்னை நாடி வரும் பறவைகளின்
தாகத்தை தெவிட்டும் வரை தீர்த்து ஆனந்தமடைகிறது

நதியெங்கும் மீன்களென சுளிக்கிறது
ஹயா திக்கித் திக்கிப் பேசும் இனிமையான வார்த்தைகள்

அவள் கரை புரண்டோடும்
பேரழகை வியந்து ரசித்தபடி
அவளின் குறுக்கே பாலமென
அமர்ந்திருக்கிறேன் நான்

நதிக்கு ஹயா என்ற பெயர்
பொருத்தமாக இருப்பதாக
தங்களுக்குள் பேசிக் கொள்கின்றன
அவளின் கரையில் உலவும் அலவன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வனத்தில் வசிக்கும் சிறுமி

வனம் எப்படியிருக்குமென்று
அவாவினாள் ஹயா

அதற்குள் கண்களை பறிக்கும்
பகட்டு வர்ணங்கள் ஒளிருமா
கல்லில் முள்ளில் புரண்டவாறு
நதி குறுக்கறுத்தோடுமா
மேகம் முகிழ்ந்த மலைகள் நிற்குமா
நிலமெங்கும் பச்சை நிறம் பூசியதுபோல
பனி பூத்த புற்கள் தலை நிமிர்ந்து நிற்குமா
இருளை வாசிக்கும் மின்மினிப் பூச்சிகள்
கண் சிமிட்டிப் பறக்குமா
விடுத்து விடுத்து கேட்டாள்

ஒன்றுக்கு மேற்பட்ட மரங்களும்
பறவைகளும் விலங்குகளும்
சேர்ந்ததுதான் வனமென்றேன்

உடன் அறைச் சுவற்றில்
மரங்கள் சிலதை வரைந்த கையோடு
கூண்டினுள் அடைபட்டிருந்த
தனது செல்லப் பிராணிகளை திறந்து விட்டு
இப்போது நானும் வனத்தில் வசிப்பதாக
புன்முறுவல் பூத்தவாறு சொல்லி
அறையெங்கும் பட்டாம் பூச்சியென
அலாதியாகப் பறந்து திரிந்தாள்

அவளோடு சேர்ந்து பறவைகளும்
தனது பூர்வீக நிலத்தில்
சஞ்சரிக்கும் உணர்வோடு பறந்து திரிந்தன
அத்தனை பசுமையும் பரபரப்பும் மீந்தது வனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்களுக்கு பிடித்த மழை

மனதுக்கு இதமான இசை மீட்டியவாறு
பெய்து கொண்டிருக்கிறது மழை

இனி சொற்கள் ஒன்று கூடி
கவிதைக்குள் பெய்யக் கூடும்

தேர்ந்தெடுத்த சொற்களுக்கு குளிரெடுத்து
பூனைக் குட்டிகளென
தாள்களினிடை சுருண்டு படுக்கும்
சொற்களின் கூதலைப் போக்க
போர்வையால் போர்த்தி விடுகிறேன்

அதையும் மீறி சில சொற்களுக்கு
இருமல் காய்ச்சல் பிடிப்பது
தவிர்க்க முடியா ஒன்றுதான்

மழை பெய்து கொண்டிருக்கும் இந்நேரம்
எனது சொற்களுக்கு
அதனை விட வேறு எதனையுமே
பெரிதாக பிடிக்கச் சாத்தியமில்லை

மழை சொற்களென பெய்து
கவிதைகளாய் ஓடிக் கொண்டிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவையின் மனசு

மயிரிழையில் தப்பிப் பிழைத்து
உயிருக்கு போராடிய பறவை ஒன்றினை
வீட்டுக்கு அழைத்து வருகிறேன்

முதலில் முறிந்திருந்த
அதனிரு சிறகுகளுக்கும் களிம்பு பூசி
அதனை பராமரிக்கிறேன்

அதற்கு மிகவும் விருப்பமான
கனி வகைகள்
மற்றும் தானியங்களை கொடுக்கிறேன்

நாளடைவில் பறவை குணமடைந்து
என்னை விட்டும் பறக்க எத்தனித்தது

அது பறி கொடுத்த
தனது எல்லையற்ற வானத்தையும்
அடர் வனத்தையும் மீளக் கேட்டது

உடன் கூட்டின் கதவினை
அகலத் திறந்து விடுகிறேன்

இருந்தும் கடைசிவரை அதன் மனசில்
இடம் பிடிக்க முடியாமல் போனதை நினைத்து
கவலை இருக்கத்தான் செய்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏவி விடப்பட்ட சொல்

மிக இலகுவில் வசப்படக் கூடியதும்
வசீகரமானதுமான
ஒரு சொல்லைக் கண்டேன்

அபாண்டம் மீந்த
இட்டுக் கட்டப்பட்ட பழிச் சொல்லது
யாரும் உரிமை கோராதபடி
நிர்வாணமாக அலைந்து திரியுமது
தனது தாகத்தை தீர்த்துக் கொள்ள
தோதான இடம் தேடிப் பதறுகிறது

ஈற்றில் சிகை அலங்கரிக்கும்
கடை ஒன்றில் நுழைகிறது

பின்னர் அங்கிருந்துதான்
வெவ்வேறு வடிவங்களில் உருமாறி
இதர இடங்களுக்கு செல்கிறது

அதனை கடந்து செல்பவர்களின்
காதுகளில் சர்ப்பமென நுழைகிறது

அச்சொல் என் வசமிருந்து
இன்னொருத்தரிடம் தாவிய கணத்தினிடை
என்னால் உய்த்துணர முடிந்தது
அது யாரோ ஒருத்தர் மீது
ஏவி விடப்பட்டதன் சூட்சுமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹயாவின் கன்னத்தில் விரிந்த பறவையின் ஆகாயம்

நானும் ஹயாவுமாக
பறவைகள் காட்சி சாலைக்குச் செல்கிறோம்

அங்கு விதம் விதமான பறவைகள்
வளர்க்கப்படுகின்றன
அதன் கண்களில் தெரிகிறது
இழந்து போன ஆகாயம்

பறவைகளை கண்ட பேரானந்தத்தில்
பட்டாம்பூச்சியென சிறகடித்துப் பறந்தாள் ஹயா

அதிலொரு பறவை
அவளை தலையசைத்து அழைக்கிறது

உடன் அதனருகில் சென்றதும்
அவள் பட்டுக் கன்னத்தில்
இதழ் பதிந்த முத்தமொன்றை
கம்பி இடுவலினூடாக பரிசளிக்கிறது

ஈரம் உலர்வதற்கிடையில்
முத்தத்தின் ஸ்பரிசத்தை உணர்ந்தவள்
திட்டமிட்டு பறிக்கப்பட்ட
அதன் எல்லையற்ற ஆகாயம்
தனது கன்னக் குழியில்
விரிவதாக சொல்கிறாள் ஹயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதி நிலம்

இதுவரை காலமும் வனத்தை
தரிசிக்கவில்லையென்ற
பெரும் மனக்குறை இருந்த போதும்
அதன் மூதாதையர்களோடுதான்
இப்போதும் வசித்து வருகிறேன்

என் மகவுகள் தொட்டிலில்
ஆழ்ந்து துயிலும் போது
அதன் பசுமை மீந்த மடிதனில்
துயில்வதாக உணர்கிறேன்

சாய்வு நாற்காலியில் சாயும் போது
அதனோடு இரண்டறக் கலக்கிறேன்

கட்டிலில் உறங்கும்போது
காட்டினிடை நடமாடுகிறேன்

இடைக்கிடை வீட்டுக் கதவுகளை
இழுத்தச் சாத்தும் போது
ஒரு வயதுபோன மரத்தின்
அழுகை சப்தம் கேட்கிறது

வனமென்பது நமது ஆதி நிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வை இனிப்பூட்டும் மாங்கனி

காலத்தின் மரக் கிளையில்
ஒட்டு மாங்காயென
காய்த்து தொங்குகிறேன் நான்

என் முகம் சிவந்து கனியும் வரை
எல்லோரும் நாவூறக் காத்திருக்கின்றனர்

முலையூட்டிப் பறவைகள்
அழையா விருந்தாளியென
பின்னிரவுகளில் பிரசன்னமாகி
என்னை சாப்பிட்டுச் செல்கின்றன

அது விட்டு வைத்த மீதங்களை
அணிலும் காகங்களுமாக தெவிட்டும் மட்டும்
சுவைத்துச் செல்கின்றன

காம்புடைந்து விழுந்ததும்
எறும்புகள் முண்டியடித்து ருசி பார்க்கின்றன
மாரி காலங்களில் தேவைப்படலாமென்று
சேகரமும் செய்து வைக்கின்றன

இப்படி எல்லோரது மனசிலும்
தேனாக இனிக்கிறேன் நான்
வெறும் வடுவாக இருந்து
ஈற்றில் உதிர்ந்து செத்து மடிந்திடாது
மாங்காயென காய்த்து கனிந்து பாருங்கள்

வாழ்க்கை எத்தனை மடங்கு
இனிப்பாக இருக்குமென்பதனை
காலம் உமக்கு நிச்சயம் உணர்த்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூனையின் பிரிவின் துயர்

ஹயா உட்பட யாருடைய முகத்திலும்
துளியும் மலர்ச்சி இல்லை
சாப்பாடும் சரியாக இறங்கவுமில்லை
செரிமானமாகவுமில்லை
வழமை போன்று பீங்கானில் பரிமாறும்
மீன் முட்களுக்காக இரஞ்சிக் கத்தும்
பூனையின் சப்தமற்று
மௌனம் சாதிக்கிறது வீடு
கண் விடுக்கா குழந்தைப் பருவத்திலிருந்து
ஹயாவின் கால்களை சுற்றிச் சுற்றியே
வளர்ந்து வந்த பூனையது
வேறெங்கேனும் சென்று
வாய் பார்த்து நிற்க சாத்தியமில்லை
பின்னது எங்கு சென்றிருக்கும்
ஏதேனும் விபத்தில் சிக்குண்டிருக்குமா
அந்தி படர்ந்து இருள் சடைத்தும்
ஏன் இன்னும் பூனை வரவில்லையென்று
இடைக்கிடை அவாவி நச்சிரித்தாள் ஹயா
அவளின் கண்களில் வரையப்பட்டிருக்கிறது
பூனையின் பிரிவின் துயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைகளின் மரம்

கதைக்கப் பழகும் குழந்தையானது
முதலில் வாய் பார்த்து திரிகிறது

பின்னர் அவர்களிடமிருந்து உதிரும்
சிறியதும் பெரியதுமான சொற்களை
தீரா தாகமெடுத்தலைந்து திரியும்
ஒரு பறவையைப் போல்
ஒவ்வொன்றாக கிளறிக் கிளறி
தானியமென பொறுக்குகிறது

அதில் ஒழுக்கமான சொற்களெது
ஒழுக்கமற்ற சொற்களெதுவென்று
அதனால் இனம் காணவோ
உய்த்துணரவோ முடியவில்லை

நாளடைவில் சொற்கள் துளிர்த்து சடைத்து
கதைகளின் மரமாகிறது குழந்தை

இதில் என்ன ஆச்சர்யமென்றால்
குழந்தை பாரதூரமான
சொற்களை உதிர்த்தும் போதுதான்
கதை பொறுக்கித் திரிந்த செய்தியே
பெற்றோர்களுக்கு தெரிய வருகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றை கட்டி வைத்து அடிக்கும் சிறுமி

சலவை இயந்திரமற்றதொரு
வீட்டுச் சூழலில்
சிறுமியின் ஆடைகளை துவைத்து
கொடியில் உலர விடுகிறாள் உம்மா

வேறு வேலைகள் எதுவுமற்று
அது வழியே திமிறித் திரிந்த காற்று
துவைத்த ஆடைகளை புழுதியில்
தள்ளி விட்டு விளையாடுகிறது

வெட்டியாய் திரியும் காற்றின்
கால்களை முறித்துப் போட
யாருமில்லையாவென மனதுக்குள் குமுறும்
உம்மாவின் மனதை ஆற்றுப்படுத்த
உடன் காற்றைப் பிடித்து
பலூனில் அடைத்து கட்டிப் போட்டு
அடித்துதைக்கிறாள் சிறுமி

இப்போது திமிறித் திரிந்த காற்று
மூச்சுத் திணறி விடுபட
அயர்ச்சியுறாது போராடுகிறது

இருந்தும் பலூனை சிதறடிக்கச் செய்து
காற்றை மிரளச் செய்ய
ஒரு மண் துணிக்கை போதுமென்பது
சிறுமிக்குத் தெரியாமலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருந்தும் நதி

கடலை சந்திக்கச் சென்ற நதி
கூடிக் கூடி புறுபுறுப்பதெல்லாம்
எதைப் பற்றியதாக இருக்குமோ

வரும் போது தரதரவென
இழுத்து வரப்பட்ட
ஆம்பல் பற்றியதாக இருக்குமா

வலுக் கட்டாயமாக அழைத்து வந்த
உப்பு நீருக்கு ஒத்து வரா
நன்னீர் வாழ்
உயிர்கள் பற்றியதாக இருக்குமா

வரும் அவசரத்தில் கவனிக்காது
உடைத்தள்ளி கொணர்ந்த
எல்லை வேலிகள் பற்றி இருக்குமா

அன்றி வரும் வழியில்
அடித்து வரப் பட்ட
குழந்தையின் தவற விட்ட
ஒற்றைச் சப்பாத்தாக இருக்குமா

தவறிழைத்த ஒன்றைப் போல்
கடலின் அலைகளை பிடித்து
வருந்திக் கொண்டிருந்தது நதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலர் செம்மீன்

குரலெழுப்பி விற்றுச் செல்லும்
கைவிடப்பட்ட அம்மாவிடம்
முதலில் உலர் செம்மீன்களை
முகர்ந்து பார்க்கிறான்

பின்னர் ஒரு பிடியள்ளி
தின்று பரிசோதிக்கிறான்

ஈற்றில் சிறு ஒற்றுகையற்று
பேரம் பேசுகிறான்

வெயிலில் செம்மீனாக
ஏழை அம்மா உலர்வதை
அவன் கடைசிவரை
கணக்கில் எடுக்கவில்லை

கையேந்திப் பிழைக்காமல்
உழைத்து வாழும் கரங்களை
ஆற்றுப் படுத்துவர் யாருளர்

விலை பொருந்தவில்லயென
நழுவிச் செல்பவனை
வெறித்துப் பார்த்து நிற்கும்
அம்மாவின் குடலை தின்னுகிறது
மகவுகளின் தீராப் பசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோடை மழை

கொல்லன் உலையென நிலம் கொதிக்கும்
நீள் கோடையில் நா காயும் தகிப்பினில்
உதிர்ந்து கிடக்கும் சருகுகளில்
என்னை நொறுக்கியவாறு
சாலை மருங்கினில் தனியாக நிற்கிறேன்

இதற்கு முன் வேறெங்கேனும் பார்த்திரா
சுடிதாரணிந்த பருவ மங்கையொருத்தி
என்னை கடந்து செல்கிறாள்

அவள் பூசிச் செல்லும் செண்டு வாசனை
என்னை பராக்காக்கி விடுகிறது
அக்கணங்களினிடை ஒரேயொரு புன்னகையைத்தான்
என் மீது வீசி விட்டுச் செல்கிறாள்

உடன் மனசுக்குள் மப்பும் மந்தாரமும் நிலவி
இதமான குளிர் காற்று வீசத் துவங்கியது
கூடவே இடி முழக்கமும் நிகழ்ந்து
இடைக்கிடை மின்னலும் வெட்டி மறைந்தன

இப்போது எனக்குள்
அடை மழை பெய்து கொண்டிருக்கிறது

அவள் மீளவும் மீளவுமென
என்னை திரும்பித் பார்த்தபடி
அதே மலர்ச்சியுடன் சென்று
முற்றாக மறைந்து விட்டாள்

மழை பெய்து ஓய்ந்த பின்பும்
வானவில்லென முகிழ்ந்து
எனக்குள் ஒளிர்கிறாள்

இதற்கு முன் எங்கேனும் சந்தித்திரா
யாரென்றே தெரியா அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூண்டிலில் நெளியும் நிலா

என்னதான் நீங்கள்
தலைப் பிறையினை
ஒடித்த யானைத் தந்தமென
வியந்து வர்ணித்தாலும்
நதியில் செல்லும்
துடுப்பில்லா ஓடமென
தெவிட்டாது ரசித்தாலும்
பருவ மங்கையின்
புருவமென கவிதை பாடினாலும்
சலனமின்றிக் கிடக்கும்
இரவுக் குளத்து மீன்களுக்கு
அது எப்போதும்
தூண்டிலில் நெளியுமோர் மண்புழுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்டு செல்லும் முறுகல்

புரிந்துணர்வற்றுப் பெருக்கெடுத்த
ஒரு முறுகலின் பின்னர்
வீடு சிரிப்பிழந்து கிடக்கும் இந்நேரம்
நீ பேசுவாயென்று நானும்
நான் பேசுவேனென்று நீயும்
மௌனம் சாதிக்கிறோம்

நமது முற்றத்துச் செடிகளில்
முகிழ்ந்திருக்கும் மலர்களிடம்
வண்டுகள் மனம் விட்டு
குளைந்து குளைந்து பேசுகின்றன

கூண்டில் அடைபட்டிருக்கும் பறவைகள்
தலைகோதி அலகுரசிப் பாடுகின்றன
ஏன் நமது குழந்தையின் பொம்மைகள் கூட
ஒன்றையொன்று தலையசைத்து
தனது மொழியில் உரையாடுகின்றன

ஆனால் நாம் மனசுக்குள் புழுங்குகின்றோம்
வார்த்தைகளை சிதைக்கின்றோம்
காலத்தை உதிர்த்துகின்றோம்
நமது கண்கள்
இன்னும் பேசத் துவங்கவில்லை

நமக்கிடையிலெழுந்த அர்த்தமற்ற முறுகல்
எதுவித தீர்வுகளுமின்றி
நீண்டு கொண்டே செல்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உம்மாவின் சிறகுகளால் பறப்பவன்

உம்மா! எனது பேரண்டமே
அன்பின் விளை நிலமே
நீ என் நெஞ்சுக் கூட்டை விட்டும்
நிரந்தரமாக பிரிந்து சென்று வெகு காலமாகியும்
மறக்கடிக்க முடியா
நின் பாசமிகு நினைவுகளில்தான்
நிதம் கரைந்து கொண்டிருக்கிறேன்

நீ அன்பளிப்புச் செய்த
மின்மினிப் பூச்சியின் ஒளியால்தான்
எனக்கான விடியல்
இப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது

நான் குழந்தையாக இருந்தபோது
எனது அழுகையினை
நீ மொழி பெயர்த்த அதே வார்த்தைகளால்தான்
நான் இப்போதும் பாடிக்கொண்டு திரிகிறேன்

நீ என் மனசில் செதுக்கி விட்டுச் சென்ற
அதே இலட்சியங்களைத்தான்
நான் கனவும் காண்கிறேன்

உம்மா நீ பரிசளித்த
அதே சிறகுகளால்தான்
நான் இப்போதும் பறந்து கொண்டிருக்கிறேன்

எனது வானமும் நீயே!
எனது சிறகுகளும் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழலின் நிசப்தம்

மிக அருகிலிருந்தும்
ஒரு முறையேனும்
கேட்க முடியவில்லை
நிழல் விழும் சப்தங்களை

சில வேளை
மரங்களில் வசிக்கும்
பறவைகளின் உறக்கம்
கலைந்து விடக் கூடும்
என்பதனால் என்னவோ
ஆதியிலிருந்து
இப்படி நிசப்தமாக
விழுகிறது நிழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எறும்பாக இருத்தல்

இனிமையான பாடல் ஒன்றுக்கான
சொற்களை முற்றாக எழுதி
தாள் மீது பாரமேற்றி வைக்கிறேன்

அதனை இனிப்பென நினைத்த எறும்புகள்
எதற்கும் மழைக் காலங்களில்
தேவைப்படலாமென்று
இழுத்துச் சென்று சேகரம் செய்கின்றன

தூரத்தில் ஒலிக்கும்
இசையை செவிமடுத்த எனது சொற்கள்
உடன் பாடத் துவங்கியது

அதில் மதி மயங்கிய எறும்புகள்
நடனமாடி மகிழ்ந்தன

நான் சொல்வது பொய் என்றால்
நீங்களும் எறும்பாக மாறி
அவை இருக்குமிடம் சென்று
சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளலாம்

அன்றி அதனோடு சேர்ந்து
நடனமாடி திளைக்கலாம்
நானும் தற்போது
எறும்பாகத்தான் இருக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகு முளைத்த சொல்

வளர்ப்பு பறவையென்று
தலைப்பை எழுதி விடுகிறேன்

பின்னர் கவிதையை வடிப்பதற்காக
கைவசமிருந்த சொற்களை
மேசையில் கலைத்துப் போடுகிறேன்

இப்போது பொருத்தம் மிகுந்த
ஒவ்வொரு சொல்லாக
தெரிந்து கொண்டிருந்தேன்

அதற்குள்ளாக தாளிலிருந்தும்
பறந்து விட்டது தலைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானத்தை பறி கொடுத்த பறவை

உம்மா சிறுமியாக இருந்த போது
பட்டாம் பூச்சியென பறந்து திரிந்த காலங்களை
நினைவு வல்லுகத்திலிருந்து
சிதறிய சில்லறை குற்றிகளென
பல தருணங்களில் கேட்டு மகிழ்திருக்கிறேன்

உம்மாவின் ஆரண்யப் பராயத்தின் கிழர்த்தலென்பது
மிகவும் அலாதியானதும்
எல்லையற்ற பரவசத்தையும் உணர்த்தியது

ஆனால் எனது வானத்தை மட்டும்
வலுக் கட்டாயமாக
அறையில் பூட்டி வைத்து விட்டு
கதை கேட்கும் உம்மாவிடம்
பெரிதாக எதனைத்தான் பேசி விட முடியும்
என்னை திறந்து விடுங்களென்று
உரத்துச் சொல்வதை தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியின் கடல்

வெளியேறிச் செல்ல
சிறு துவாரமுமின்றி
வீட்டு முன்றலில் தேங்கிக் நிற்கிறது
பின்னிரவு பெய்த
அடை மழையின் தாரைகள்

வாசல் தோறும் பரவி நிற்கும் நீரை
அடித்துத் துரத்தி விட
எல்லைச் சுவரில் துவாரமொன்றை
துளையிடத் துவங்கினேன்

அக்கணங்களினிடை
ஒரு கப்பலைச் செய்து
அதில் ஓடவிட்டு
தேங்கிக் கிடந்த மழை நீரை
கடலாக்கினாள் சிறுமி

அவளின் கடலை
சிதைத்துவிட மனமின்றி
நானும் சிறுமியோடு சேர்ந்து
கப்பலில் பயணம் செய்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுகிச் செல்லும் வானம்

நதியில் விழுந்து
வெண்ணிற கம்பளமென
மிதக்கிறது வானம்

தான் அனேக தடவைகள்
தொட நினைத்த வானம்
காலடியில் மிதப்பது கண்டு
வியந்து பார்க்கிறான் சிறுவன்

உடன் உள்ளங் கைகளுக்குள்
வானத்தை அள்ளி எடுத்து
வீட்டுக்கு எடுத்துச் செல்கிறான்

செல்லும் வழி நெடுகிலும்
அவனை அறியாமல்
துளித் துளியாக சிந்துகிறது வானம்

இருந்தும் சிறுவனின்
கைகளில் எஞ்சி இருக்கும்
கடைசித் துளியிலும்
மிதந்திருக்கக் கூடும் வானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைக்கும் ஓவியம்

ஹயா சொல் கேளாது
அழுதடம்பிடிக்கும் தருணங்களில்
வையும் போதெல்லாம்
அவள் எப்போதோ
தனது அறைச் சுவரில்
ஆழ்ந்து ரசித்து வரைந்து விட்ட
செல்லப் பிராணியின் ஓவியம்
என்னைக் கடித்துக் குதறுவதுபோல
கண்கள் சிவக்க
முறைத்து பார்க்கத் தவறுவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹயாவின் மனசின் கூட்டில் வளரும் பறவைகள்

செல்லப் பிராணிகளென வளர்ப்பதற்கு
பறவைகள் சிலதை வாங்கித் தரும்படி
அடிக்கடி சிணுங்கினாள் ஹயா

பிறகு வாங்கித் தருவதாக சாட்டுச் சொல்லி
காலம் கடத்தி வந்தேன்
கையறு நிலமையினை உணர்ந்தவள்
தன்னிடமிருந்த நிறங்களை கொண்டு பிரியமான
பறவைகள் சிலதை அறைச் சுவற்றில் வரைந்தாள்

அதற்கு மூச்சுத் திணறுமென்று
அறையின் இமைகளையும் கதவினையும் திறந்து வைக்கிறாள்

நேரம் போவது தெரியாமல்
அதனோடு அலாதியாக உரையாடினாள்
அலகினில் முத்தம் கொடுத்தாள்
பெயர் வைத்து சப்தமிட்டு அழைத்தாள்

தட்டத்தில் தானியங்களையும்
பழங்களையும் வரைந்து பரிமாறினாள்
அது சாப்பிடாமல் இருப்பது பற்றி
கவலை தோய்ந்தபடி முறையிட்டாள்

உடன் அவளுக்கு தெரியாமல்
தானியங்களையும் பழங்களையும்
எனது நிறங்களால் மறைத்து விடுகிறேன்

அவை சாப்பிட்ட திருப்தியில்
ஆழ்ந்து உறங்குகிறாள் ஹயா

இப்போது அவளின் மனசின் கூட்டில்
வளர்ந்து வருகின்றன பறவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவின் வன்மம்

விண்மீன்களென
கண் சிமிட்டித் திரிகின்றன
மின்மினிப் பூச்சிகள்

அது சுடரேந்திச் செல்லும்
அணி வகுப்பை வியந்து ரசித்திடல்
கண் கொள்ளாக் காட்சியாகும்

பெருவெளியெங்கும் சுதந்திரமாக
பறந்து திரியும் மின்மினிகளின் அழகை
உடன் சிதைத்து விடுகிறது

தீராப் பசியோடு இரைக்காக
அலைந்து திரியும் பறவைகளுக்கு
சிறு உறுத்தலுமின்றி
காட்டிக் கொடுக்கும் இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழுகை என்ன மொழி

அழுகையின் மொழி
என்னவாக இருக்கும்

குரலற்றதா அழுகை

அதுவும் சிரிப்பைபோல்
பொது மொழியாக இருக்குமோ

குழந்தைகளின் அழுகைகளை
அம்மாக்களால் மட்டுமே
மொழி பெயர்க்க முடிகிறது

கொல்லன் உலையில் சிக்கிய
இரும்புப் பாழமென
காலத்தின் சம்மட்டியால்
அடி வாங்குகிறேன் நான்

அம்மா இல்லாமல் தவிக்கும்
என் கண்ணீரை
யார் வந்து மொழி பெயர்ப்பாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைதலின் துயரம்

காலத்தின் முன்றலில் விரியும்
தூசும் துரும்புமான வாழ்வின் தீராப் பிரச்சினைகளுக்குள்
சிக்குண்டு என்னை முழுவதுமாக தொலைக்கிறேன்

நான் இன்றி எனது வீடு
இந்நேரம் துயரத்தில் மூழ்கி இருக்கும்
மகவுகள் பசியாறாமல் காத்திருப்பார்கள்
செல்லப் பிராணிகள்
சோகத்தில் துவண்டு படுக்கும்
எனது வாழ்வின் தொடர்ச்சியாக வந்தவளின் கண்களில்
உப்பாறு பெருக்கெடுக்கும்

ஆதலால், என்னை எங்கேனும் கண்டெடுத்தால்
சுடும் சொற்களால் வையாதீர்கள்

நான் ஏலவே மனதளவில்
உடைந்து போயிருக்கிறேன்

என் தோய்ந்த மனசை
உங்களது சிரித்த முகத்தில் மலரும்
இனிப்புமிகு வாரத்தைகளால்
ஆற்றுப்படுத்துங்கள்

பிரச்சினைகளை சமாளிக்க முடியாதவர்கள் மத்தியில்
நான் மட்டும் விதிவிலக்கா என்ன

எஞ்சியிருக்கும் வாழ்வை செப்பனிட
வேட்கைமிகு பறைவையைப் போல
காலத்தோடு போராடுவேன்
நிச்சயம் போராடித்தான் சாவேன்
அதன் சிறகுகளைவிட வலிமையற்றதா
எனது தன்னம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமிக்கு தாயின் பாசம்

சிறுமி வீடடையும் வரை
சாலை தோறும் சிந்தி வருகின்றன
அரிசி மணிகள்

அதனை தாகமெடுத்து அலைந்து திரிந்த
காக்கைகள் கொறித்து
தீராப் பசியை ஆற்றுகின்றன

கவனமின்றி அரிசியை சிந்தியமைக்காக
சிறுமியை சாடுகிறாள் உம்மா

ஏச்சுக்களை வாங்கிக் கொண்டு
எதுவுமே பேசாமல்
மௌனமாய் நிற்கிறாள் சிறுமி

இத்தனைக்கும் வேண்டுமென்று
அரிசியை சிந்த வைத்து
காகங்களின் பசியை ஆற்றியதில்
சிறுமிக்கு நிச்சயம் இருக்கிறது
ஒரு தாயின் பாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயல்

பொழியும் காலைப் பனியில்
கொடுகிச் சிலிர்த்தபடி
எனது இருப்பிடத்தை
தினமும் கடந்து செல்லும் தேவதைக்கு
யாருடைய சாயலும் இல்லை

நீல வான ஓடையில் நீந்தும்
பால் நிலவின் சாயலோ
முற்றத்துச் செடிகளில்
கண்களை கவர்ந்து மலர்ந்து நிற்கும்
பூக்களின் சாயலோ
என் கனவில் புன்னகை சொரிந்து
தூக்கத்தை தட்டிப் பறிக்கும்
பருவப் பெண்ணின் சாயலென
யாருடைய சாயலிலும் இல்லை

இருப்பினும் திரும்பத் திரும்ப
வைத்த கண் வாங்காது
என்னை பார்க்கத் தூண்டுகிறாள்

சலனமின்றி நிசப்தமாகக் கிடக்கும்
மனசின் குளத்தில் புன்னகை வீசியபடி
மௌனம் கலைத்துச் செல்லும்
அவள் யாருடைய சாயலாக இருப்பாளோ

இருப்பிடத்தை கடந்து சென்ற பின்பும்
கண் விடுக்காத பருவத்திலிருந்து
எடுத்து வளர்த்த வளர்ப்புப் பிராணியென
அவள் பின்னால் இழுபட்டுச் செல்கிறது
அலை பாயும் எனது மனசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு யானை என்பது

ஒரு யானை என்பது
ஒரு யானையல்ல

அது ஒரு சடைத்த மரம்
அது ஓர் அடர் வனம்
அது ஓர் அடை மழை
அது ஒரு குளம்
அது ஒரு நதி
அது ஓர் கடல்
அது பறவைகளின் கூடு
அது விலங்குகளின் வீடு
ஒரு யானையை கொலை புரிவன்
ஓர் அடர் வனத்தை
ஓர் அடை மழையை
ஒரு குளத்தை
ஒரு நதியை
ஒரு கடலை
பறவைகளின் கூட்டை
விலங்குகளின் வீட்டை
திட்டமிட்டு கொலை புரிகிறான்

ஏனெனில் ஒரு யானை என்பது
ஒரு யானை மட்டுமல்ல
அது நமது இருப்பின் ஆணிவேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதையினுள் உறங்கும் வனம்

வனமொன்றை வரைந்து தருமாறு
வற்புறுத்தினாள் ஹயா

மரங்களும் விலங்குகளும்
இதர பறவைகளும் சேர்ந்ததுதான் வனம்
இதில் எதை முதலில் வரைவதென்று
பெரும் குழப்பத்தில் இருக்கிறேன்

மரங்களை வரைந்தால்
பிறகு வரையப் போகும் விலங்குகள்
அதனை தின்று தீர்த்து விடலாம்

விலங்குகளை வரைந்தால்
ஊனுண்ணி விலங்குகள்
தாவர உண்ணி விலங்குகளை
பிடித்துண்டு பசியை ஆற்றி விடலாம்

பறவைகளை வரைந்தால்
நானே ஒரு வேடனாகி
எனது குறி தவறாத அம்புகளுக்கு
இரையாக்கி விடுவேன்

முடிவில் வனத்தை வரையும்
எண்ணத்தை கை விட்டு விட்டு
வெளியில் வந்து வாசலை பார்க்கிறேன்

ஹயா சுவைத்தெறிந்த கனியின்
விதையினுள் உறங்கியிருந்தது வனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழி போடுதல்

முதன் முதலாக பொம்மைகளை
சந்திக்கும் சிறுவர்கள்
தங்களை பழிப்பதாக முறையிடுகிறார்கள்

அது தவிர்க்க முடியா நிகழ்வாயினும்
பொம்மைகள் மீது பழி போடுவதில்
எந்த நியாயமும் இல்லை

ஏனெனில் சிறுவர்கள்
பழித்து விளையாடுவதற்கென்றே
ஆதியிலிருந்து வடிவமைக்கப்படுகின்றன பொம்மைகள்

சிறுவர்கள் பழித்த தருணங்களை
இதுவரை பொம்மைகள்
யாரிடமும் முறையிட்டதே இல்லை

தங்களுக்கு வழங்கப்பட்ட பாத்திரத்தை
மௌனம் சாதித்தபடி மிக இயல்பாக
நகர்த்திச் செல்கின்றன பொம்மைகள்
சிறுவர்களுடன் இணங்கிப்போனபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாம்பூச்சியின் புன்னகை

அம்மாவின் முந்தானையில்
அணில் குஞ்சென தொங்கியவாறு
சாலை மருங்கு தோறும்
இழுபட்டுச் செல்லும் குழந்தை
என்னைப் பார்த்து
புன்னகை சொரிகிறது

பதிலுக்கு நானும்
புன்முறுவல் பூக்கிறேன்

அக்கணங்களிடை
என்னைப் பார்த்து முறைக்கும்
அம்மாவின் தப்பபிப்பிராயத்தை
எங்கணம் நிவர்த்தி செய்வேன்

செய்வதறியாது கூனிக் குறுகி நிற்கும்
எனை நோக்கி மீளவும் மீளவுமென
புன்னகை வீசியவாறே இழுபட்டுச் செல்கிறது
இதற்கு முன் எங்கேயும் சந்தித்திரா
யாரென்றே தெரியா
கள்ளங்கபடமற்ற குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்கள் பேசும் மொழி

கள்ளங் கபடமற்று
புன்னகை சொரிந்தபடி
என்னை கடந்து செல்கிறாள்
ஓர் ஏழைச் சிறுமி

வளர்ப்புப் பூனை போல
என்னை திரும்பித் திரும்பி
பார்த்துச் செல்லும் அவள்
அப்படி என்னிடம்
எதனைத்தான் எதிர்பார்க்கிறாளோ

மின் வெட்டி மறையும்
அச்சிறு கணங்களினிடையே
எல்லா மொழிகளாலும்
என்னிடம் பேசித் தீர்க்கிறாளே

கடைசி வரை எதனையுமே
சொல்லிக் கொள்ளாமல்
என்னைக் கடந்து செல்லும்
சிறுமியின் கண்களென்ன
மொழியின் உற்பத்தி ஆலையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகளோடு பழகுதல்

நினைவுகளென்பது வேறொன்றுமில்லை
அது கறுப்பு வெள்ளை புகைப்படம்

ஐம்பது வயதை கடந்த பின்னரும்
எனது மனசின் அறைச் சுவரில்
அழியாப் புகைப்படமென தொங்குகிறது
பால்ய காலத்தின் நினைவுகள்

எனது கொடியில் படரும் போதெல்லாம்
அதனோடு தெவிட்டாது பழகியும்
உரையாடியும் கொள்கிறேன்

நான் இடைக்கிடையே துயரில் மூழ்கி
தனிமையில் சாயும் போதெல்லாம்
அதுதான் என்னை ஆற்றுப்படுத்துகிறது

இப்போதும் எனது மனசின் அறையில்
மறக்கவியலாத சிறுபாராய நினைவொன்று
என்னை பார்த்துச் சிரித்தபடி இருக்கிறது

இத்தனை ஆண்டுகள் கடந்த பின்னும்
நினைவுகளின் புகைப்படத்தில்
நானும் சக வகுப்பு நண்பர்களும்
சிறுவர்களாவே வசிக்கிறோம்

நினைவுகளென்பது வேறொன்றுமில்லை
அது கறுப்பு வெள்ளைப் புகைப்படம் மட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுபடா கர்வம்**

எத்தனை முறை புரிந்தாலும்
சில கர்வங்கள்
அனேமாக எடுபடுவதில்லை

அது கர்ஜித்த அதே கணம்
பரபரப்புகள் எதுவுமின்றி
உடன் அடங்கி விடுகிறது

வேலை வெட்டி எதுவுமற்ற கணவன்
அவ்வப்போது மனைவியிடம்
புரியும் கர்வத்தை போல
தங்கி வாழும் பிள்ளைகள்
அடிக்கடி பெற்றோர்களிடம்
புரியும் கர்வத்தைப் போல
நண்பனுக்கு முதுகு சொறிந்து
ஓசித் தேநீர் குடிக்கும் நண்பன்
இடைக்கிடையே புரியும் கர்வத்தைப்போல
கூடுகட்டத் தெரியாத குயில்
ஆதியிலிருந்து காக்கையிடம்
புரிந்து வரும் கார்வத்தைப் போல
இங்கு அனேகமான கர்வங்கள்
எத்தனை முறை புரிந்தாலும்
எடுபடாமலே அடங்கி விடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையில் நனையும் தேநீர்

தேநீருக்கும் மழைக்கும்
ஆதியிலிருந்து ஒத்துப் போகிறது

அப்படி என்னதான்
இரண்டிற்கும் தீரா சிநேகமோ

மழை பெய்யும் போது
தேநீருக்காக ஏங்குகிறோம்

தேநீர் அருந்தும் போது
மழைக்காக வேண்டுகிறோம்

ஆனால் நம் கூடலின்றி
மழையும் தேநீரும்
தனித்தனியாக பிரிந்திருக்கின்றன

யாருக்காகவோ பெய்கிறது
யாருக்காகவோ காத்திருக்கிறது

நின்னை கை பற்றிய நாளிலிருந்து
நான் மழையாகத்தான்
பெய்து கொண்டிருக்கிறேன்

நீ எப்போது தேநிராக
இனிக்கப் போகிறாய்

நமது மழைக்கும்
தேநிருக்குமிடையில்
நிலவுகிறது கடும் கோடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுள் ஒரு கண்ணாடி

உடைந்து சிதறுண்டு கிடக்கும்
நிலைக் கண்ணாடியில்
துண்டம் துண்டமாகக் கிடக்கிறதென் பிம்பம்

இரத்தமும் சதையுமென
சிதறுண்டு கிடக்கும்
என் யாக்கையின் துண்டங்களை
நானே கூட்டி அள்ளி
குழி தோண்டிப் புதைக்கிறேன்

எனக்கென்று விதியாக்கப்பட்ட
ஆயுளின் கண்ணாடி மீது
ஒரு கணம் முந்தாமலும்
ஒரு கணம் பிந்தாமலும்
குறி பார்த்து எறியப்பட்டிருக்கிறது
காலமெனும் கனமறியாத கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதியினுள் மாட்டித் தவித்தல்

நெடுந்தூர ரயில் பயணமொன்றில்
வரலாற்று நாவல் ஒன்றினை
ஆழ்ந்து வாசித்துக் கொண்டிருந்தேன்

அக்கால மாந்தர்களது வாழ்வியல்
அரசனின் அந்தப்புரம்
சித்திரவதைக் கூடங்கள்
குதிரைகளின் படையணி
விசித்திரமான வழக்குகளும் தீர்ப்புகளுமென
பரபரப்பாக நகர்ந்து கொண்டிருந்தது கதை

கதையின் ஒரு பக்கத்தில்
புதையல் இருக்கும் இடம் பற்றி
வரைபடத்துடன் சொல்லப்பட்டிருந்தது

அதில் குவிந்து கிடக்கும்
ஆபரணங்களின் ஒளி கண்களை பறித்தது

ஊர் ஆழ்ந்துறங்கும் நடுநிசியில்
புதையல் இருக்கும் பக்கத்தினுள்
ஒரு திருடனைப் போன்று மெதுவாக இறங்குகிறேன்

ஆனால் புதையலை பாதுகாப்பதற்காக
அரசனால் ஏவி விடப்பட்டிருந்த பூதம்
இருந்த வரிகளை அவசரத்தில் வாசிக்க மறந்து விட்டேன்

நான் இப்போது பிரதியின் நூற்றியொராவது பக்கத்தில்
பூதத்திடம் மாட்டிக் கொண்டு தப்பித்து வர
வேறு வழியின்றி போராடிக் கொண்டிருக்கிறேன்

சக பயணிகளில் யாராவது ஒருத்தர் உடனடியாக
இந்தப் பிரதியை வாசித்து என்னைக் காப்பாற்றுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாத்தியமற்றது தனிமை

தனித்திருக்கப் போகிறேன்
என்று சொல்பவனை
ஆகக் குறைந்த பட்சம்
அவன் ஏலவே வாசித்து
மனசை தொந்தரவு செய்யும்
புத்தகத்தின் பக்கங்களும்
வியந்து ரசித்த பிரசித்தமான
ஓவியத்தின் நிறங்களும்
தனக்குத் தெரியாமல் காலில் சிக்குண்டு
துடிதுடித்து இறந்து போன
புள்ளப் பூச்சி பற்றிய உறுத்தல்களும்
நம்பவைத்து கழுத்தறுப்புச் செய்த
துரோகமிகு முகங்களும்
அடிக்கடி மனதுக்குள் முணுமுணுக்கும்
இனிமையான பாடல்களும்
எல்லாவற்றுக்கும் மேலாக
தன்னை இடையூறு செய்யும்
மறக்கடிக்க முடியா பழைய நினைவுகளும்
ஒரு போதும் அவனை
தனிமையில் இருக்கவோ
தனித்திருக்கவோ விடப் போவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருளை வாசிக்கும் குழந்தைகளின் சிரிப்பு

கள்ளங் கபடமற்ற
செல்லக் குழந்தைகளின்
வெல்லச் சிரிப்பினில்
நிதம் கரைந்து போகிறேன்

அவர்களென் நுதல் பொட்டிலிடும்
நுங்கிதழ் பதிந்த
இடையுறா முத்தங்களை உணரும்
எல்லையற்ற பரவசத்தின் கணங்களிடை
ஒரு தொகை மின்மினிகள்
என் மனசின் இருளை வாசித்தபடி
கண்சிமிட்டிப் பறக்கின்றன

அருந்தருந்த தெவிட்டாமலிருக்கும்
திராட்சைப் பழச்சாற்றின்
தீராச் சுவையினை ஒத்தது
மின்மினிகளின் இதழ் சிந்தும் சிரிப்பு

அச்சிரிப்பினில் ஒளி நிரம்பி
பீரிட்டு வழிவதனால்
குழந்தைகள் வசிக்கும் வீடுகளில்
இருளிருக்க சாத்தியமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் நதி

நானொரு பருவப் பெண்
கல்லில் முள்ளில் மோதி
விரைந்து செல்லும் நதி நான்

எப்போதும் என் மனம்
குளிர்மையாகவே இருக்கும்

எனக்குள் சுழிப்பது
முரட்டுத்தனமிகு மீனாக இருந்தாலும்
அதனை அரவணைத்தபடியே நகர்வேன்

ஒரே இடத்தில் தேங்காமல்
ஓயாது ஓடிக் கொண்டிருக்கும்
வேட்கை மிகு பேராறு நான்

என்னை சிறு குட்டையென நினைத்து
துவம்சம் செய்தால் காலில் விழுந்து
கெஞ்சி மன்றாட மாட்டேன்

எனது மௌனத்தை உடைத்து
கரைகளை தாண்டி வந்து
உங்களை மூழ்கடிக்கச் செய்வேன்

என்னை எத்தனை முறை சுட்டாலும்
மீளவும் மீளவுமென குளிர்ந்தெழும்
வல்லமை மிக்கவள் நான்

ஏனெனில் நானொரு பெண்
நானொரு நதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகம் வாசிக்கும் காற்று

புத்தகங்களை யாரோ
புரட்டும் சப்தம் கேட்டு
அறையை திறந்து பார்க்கிறேன்

நீண்ட நாட்களாக வாசிக்கப்படாமல்
புழுதி வளர்ந்து கிடந்த புத்தகங்களை
சன்னலூடாக வந்த காற்று
வாசித்துக் கொண்டிருந்தது

காற்று என்ன மொழியில்
வாசித்திருக்கும் என்பதெல்லாம்
எனக்கு அவசியமில்லை

வெளியில் வந்து பார்க்கிறேன்
வாசித்த சம்பவங்களை
கிளைகளில் அமர்ந்தபடி
இலைகளுடன் பகிர்ந்து கொண்டது

இருந்தும் திரும்பிச் செல்லும் போது
இறுதியாக வாசித்தது
எத்தனையாவது பக்கமென்பதை
காற்று நினைவில்
எழுதி வைத்திருக்குமா என்ன

ஒவ்வொரு முறை வரும் போதும்
முதல் பக்கத்திலிருந்து துவங்கினால்
காற்று புத்தகத்தை
எப்போது வாசித்து தீர்க்குமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வை எழுதும் சருகு

நதியில் தனியாக மிதக்கிறது
வயது முதிர்ந்த மரத்தின்
கிளையிலிருந்து பிரிந்து வந்த சருகு
அது காலத்தின் கோரப் பற்களில் சிக்கி
தனது சுயத்தை முற்றாக இழந்திருந்தது
கூட்டத்திலிருந்து பிரிந்து
வழி தவறி வந்த பறவையைப்போல்
போகும் திசையறியாது
நதியின் மையத்தில் பிதுங்கி நிற்கிறது
அதன் அந்தரிப்பை
மிகச் சமீபத்திலிருந்து அவதானித்த காற்று
உடன் பறந்து வந்து
நதியை சுற்றிக் காட்டிய பின்னர்
இடை நடுவில் தவிக்க விட்டு
வந்த வழியே திரும்பிச் செல்கிறது
அச் சிறு கணங்களினிடை
நதியில் மூழ்கி உயிருக்காக
போராடிக் கொண்டிருந்த எறும்பை
முதுகிலேற்றி காப்பாற்றும் போது
தன் பிறவிப் பயனை அடைகிறது
உதிர்ந்த பின்பும் வர்ணமிழந்த சருகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கமான மரங்கள்

மரங்கள் கன்றுகளாக இருந்த போது
வரிசையாக நிற்குமாறு
ஒரேயொரு முறைதான்
சொல்லிக் கொடுத்தான் ஆசிரியன்

அதுவும் பிரம்பை காட்டி
அதட்டி உறுக்காமல்
அரவணைத்து கற்றுக் கொடுத்தான்

முதுமை அடைந்த பின்னரும்
ஒரு அடி பிசகாமல்
அப்படியே அணியாக நிற்கின்றன

எறும்புகளைப் போன்று
மிக ஒழுக்கமானவைகள் மரங்கள்

அது சிறுவர்கள் போன்று
நெருக்கித் தள்ளி
ஒரு போதும்
வரிசைகளை உடைப்பதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவையாகும் மனிதன்

விதைப் பந்துகளை
தயாரித்து எறிபவன்

முதன் முதலில்
ஒரு மரத்தை மட்டுமே எறிகிறான்

பின்னரது மரங்களின்
பண்ணையாகி
அடர் வனமாகிறது

பின்னரிலும் பின்னர்
அது மழை குளம்
நதி கடலென்று விரிகிறது

ஆதியில் பறவைகள்தான்
விதைகளை அலகில் சுமந்து
பணியை முன்னெடுத்து வந்தன

இப்போதும் தவறாமல்
புரிந்து வருகின்றன

நானும் விதைப் பந்துகளை
தயாரித்து வீசுகிறேன்
ஆதலால் பறவையாகி விடுகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈதல்**

பிறருக்கு ஈவதே வாழ்வாகி
பேருவகை அடைகின்றன
ஆதியிலிருந்து மரங்கள்

அள்ளியள்க் கொடுத்தும்
குறைந்ததே இல்லை
மா கடலின் வைப்பு

கார் மேகமும் அப்படித்தான்
பருவ காலங்களில்
மழையை தரை இறக்கி
கோடையை வழி அனுப்புகிறது

காலம் கொடுத்த எதனையும்
ஈயாமல் பதுக்கி வைக்கிறான்
மனிதர்களில் மனிதரற்றவன்

காலடிக்கு கீரை விற்க வரும்
வயதான அம்மாவிடம்
பேரம் பேசுபவனிடம்
ஈதல் குணம் இருக்குமா என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை மனம் கொண்ட ஓர் ஆணின் தாய்மை ஜமீலின் கவியுலகம்

– லறீனா அப்துல் ஹக் –

தொண்ணூறுகளில் நடுப்பகுதியில் எழுத வந்தவர் கவிஞர் ஜமீல். எழுத ஆரம்பிக்கும் போது அனைவரையும் போல தொடங்கினாலும், தொடர்ச்சியான தனது எழுத்தியக்கத்தினால் வளர்ந்து நிற்பவர். தான் அக்கறை கொள்ளும் கவிதைக்கான கருப்பொருளினடியாக தனக்கானதொரு தனித்த அடையாளத்தைக் கவிதை வெளியில் நிலை நிறுத்தியிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

சிலர் கவிதை வரும்வரை காத்திருக்க வேண்டும் என்பர். சிலர் கவிதையைத் தேடி நாம்தான் கண்டு பிடிக்க வேண்டும் என்பர். சிலர் கவிதை வந்தால் கூட அதைச் செப்பனிடக் கால அவகாசம் எடுக்க வேண்டும் என்பர். சிலருக்கு எப்போதாவதுதான் கவிதை வருகிறது என்பர். இப்படி, கவிதை குறித்த அமானுஷ்யங்கள், தொன்மங்கள் ஏராளமுண்டு. அவற்றில் எது சரியானது என்பது முடிவற்ற விவாதமாகத் தொடர்வது. ஒவ்வொரு கவிஞருக்கும் தனது நிலைப்பாட்டைச் சொல்லவும், அவற்றைப் பின்பற்றவும் உரிமை உண்டு என நம்புபவர்களின் வழியே பன்மையான இடத்தை அக்கறை கொள்பவள் நான். எனவே, அவை குறித்த விவாதங்களுக்கப்பால், கவிதையைப் பார்க்கும் மனநிலையுடனேயே இந்த நூலுக்கான குறிப்பை எழுதுகின்றேன். அவ்வகையில், கவிஞர் ஜமீல் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருப்பவர் என்பது நம் கவனத்திற்குரியதாகும்.

முகநூலிலும், தொகுப்புக்களாகவும், இதழ்களிலும் நாம் ஜமீலின் கவிதைகளைச் சந்திக்கா நாட்கள் இருக்க மாட்டா என்றே சொல்லலாம். வற்றாத நதிபோல அவருக்குள்ளிருந்து கவிதை ஊறிக்கொண்டும், ஒரு நதியாகப் பெருக்கெடுத்து இலக்கிய வெளியெங்கும் பரவியபடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது. கவிதை மனமென்பது கவிதையைச் சந்திக்கும் தருணத்தைக் குறிப்பதாக இருக்கும். அப்படிப் பார்த்தால், ஜமீலின் மனதும், சிந்தனை வெளியும் கவிதையாலானவை என்றே எண்ணத் தோன்றுகின்றது. இப்படியான வற்றாத தொடரூற்றாக ஒரு கவிதை மனம் வாய்ப்பது ஒருபெரும் கொடை என்றே கூற வேண்டும். அதே வேகத்திலும், அதே உந்துதலிலும் ஜமீலின் மனம் நிலைபெற்று இருப்பதாக!

வாழ்வை, தன்னைச் சூழ்ந்திருக்கும் மனிதர்களை, அந்த மனிதர்களால் இணைக்கப்பட்டிருக்கும் சமூகத்தை – அதன் உள்ளார்ந்த நுண்தளங்களை ஆழமாக ஊன்றிக் கவனிக்கும் அக்கறை நிறைந்த துப்பறிவாளரைப்போல ஜமீலின் கவிதை மனம் செயல்படுகிறது. இந்தச் சமூகத்தாலும், தன்னைச் சூழ உள்ள மனிதர்களாலும் குழந்தைகள், சிறுவர்கள் என்ன நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை தன் குஞ்சைப் பாதுகாக்கும் பறவையைப் போல அது அவதானிக்கிறது. நமது கவிஞர்களும், இலக்கியவாதிகளும் அதிகம் அக்கறை கொள்ள மறந்த ஒரு வெளிதான் குழந்தைகளின், சிறுவர்களின் உலகம். குழந்தைகள்தாம் பின்னர் பெரியவர்களாகிறார்கள். எனவே, குழந்தைகளின் உலகம் என்பது நேர்மையுடனும் கரிசனையுடனும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. குழந்தைகளின் மனதில் பதிந்துவிடும் விஷயங்கள்தாம் அவர்களின் பிற்கால வாழ்வை வடிவமைக்கக் கூடியவை. அவர்களின் உலகத்தை ஆழ்ந்து புரிந்து அவர்களோடு வசிக்கவும், வழித்துணையாகப் பயணிக்கவும் மனிதர்களையும் சமூகத்தையும் தூண்டும் ஒரு காத்திரமான பணியையே ஜமீலின் கவிதைகள் அக்கறை கொள்கின்றன.

இவ்வாறாக, சிறுவர்களின் உலகு குறித்து அதிகமும் அக்கறைகொண்டு, அதுகுறித்துப் பெரியவர்களோடு உரையாடும் உத்தியை ஆழமாகவும், நிதானமாகவும் முன்வைக்கும் கவிதைகள் என்றவகையில், ஜமீலின் கவிதைகளின் தனித்துவம் வாய்ந்தவை. என்றாலும், அவரது இக்கவிதைகள் குழந்தைகளின் உலகைத் தரிசிக்கச் செய்வதால், அவை குழந்தைகளுக்கான கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அர்த்தமல்ல. மாறாக, குழந்தைகள் பற்றிய புரிதலை, அதன் அவசியத்தைப் பெரியவர்களுக்கு உணர்த்துவதும், அவர்களோடு உரையாடுவதுமான ஒரு பெரும் பணியினைக் கவிதைக்கே உரிய, ஆற்றல் மிகுந்த புனைவு உத்திகளினூடே கவிதைகளாக ஜமீல் உருமாற்றித் தந்துள்ளார். அவ்வகையில், குழந்தைகளுக்கும் சமூகத்திற்கும் இடையிலான ஊடாட்டத்தை, கவிதையின் வழி புரிந்துகொள்ளவும் அவற்றை வளர்த்துச் செல்லவும் அவர் முயற்சிக்கிறார். அந்த முயற்சி வெற்றி பெற்றிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.

அற்புதமான முறையில் அமைந்த அவரது கவிதைகளில், அவர் கையாளும் அசாத்தியமான படிமங்களும், வாக்கிய அமைப்புக்களும் கவிதையின் பழமையான சரடுகளை நீக்கிப் புத்துணர்ச்சியூட்டுகின்றன. மாயமான கற்பனைவெளிக்குள் நுழைந்து யதார்த்தமான சமூக வெளிக்குள் கரையேறும் கவிதை எடுத்துரைப்புக்கள் அலாதியான மனநிலையை வாசிக்குந்தோறும் நம்மைப் பற்றிக் கொள்கின்றன.

கவிதையைச் சமூகச் செயல்பாடு என எடுத்துக் கொண்டால், ஜமீல் ஒரு சமூகக் கவிஞன். வாழ்வை மிக நெருக்கத்தில் சந்திப்பவன். வாழ்வின் இடையறாத நெருக்குவாரத்தில் கவனிக்க மறந்த இன்னுமோர் உலகத்தை உற்றுக் கவனிப்பவன். அந்த உலகத்தில் கவிதைகளோடும், கவிதை மனதோடும் சஞ்சரிப்பவன். கவிதை எழுத்தாலான ஒரு கலை என எடுத்துக்கொண்டால், பலருக்குப் பல விமர்சனங்கள் வருவதற்கு சாத்தியமுண்டு. அவ்வகையில், ஒரு கவிதை எப்படி இருக்க வேண்டும் என்ற தீராச்சண்டைகளில்தான் காலத்தை ஓட்ட வேண்டியிருக்கும். இன்னொரு வகையில் சொல்வதானால், நாம் வாசிக்கும் கவிதைகளை, நாம் சந்திக்கும் கவிதைகளை நாம் எந்தக் கோணத்தில் புரிந்துகொள்ள விரும்புகிறோம் என்பதுகூட ஒரு சுய தேர்வுதான். அதற்கான உரிமைகூட வாசகருக்கு இருக்கிறது.

உண்மையில், சுற்றியுள்ளோரால் கவனிக்கப்படாமல் கைவிடப்படும் மனிதர்களின் வலி எனக்குத் தெரியும். புறமொதுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளிம்புநிலை மனிதர்களின் துயரமும் எனக்குத் தெரியும். அதைவிடவும், இரண்டு குழந்தைகளின் தாயாக, குழந்தைகளை மிக நெருக்கமாக என்னால் புரிந்து கொள்ள முடியும். எனவே, ஜமீலின் கவிதைகளை ஒரு சமூகச் செயற்பாடு என்ற கோணத்திலிருந்துதான் நான் எதிர்கொள்ள விரும்புகிறேன். ஒரு கவிதை மனம் கொண்ட ஆணின் தாய்மை எப்படி இருக்கும் என்பதை ஜமீலின் கவிதைகளின் வழியாக நாம் உணர்ந்து கொள்ள முடியும். ஜமீலின் கவிதைகள் சமூகச் செயற்பாடாக இருந்தபோதிலும், மொழியாலான ஒரு கவிதை நிகழ்வாக இருந்தபோதிலும், மனதின் உள்ளார்ந்த அக்கறையின் ஆழத்தில் கிடக்கும் தாய்மை நிரம்பிய கவிதை மனதை மிக நேர்த்தியாக மொழியில் கொண்டு வருவதோடு, குழந்தைகளின் உலகத்தை அனைவரும் கண்டு கொள்ள வேண்டும் என்ற ஆவலையும் அவை தூண்டுகின்றன. தொடர்ந்தும் ஜமீல் இயங்க வேண்டும். அவரின் கவிதை நதி என்றும் வற்றிவிடக் கூடாது. அவருக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

*– 0 –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகளுக்காக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜமீலின் கவிதை உலகு மேற்கொள்ளும் சம்பவங்கள்;
குறிப்புகள் நிகழ் காலத் தருகைகளாகும். கூர்மையான
உள்ளுணர்வுகளை வழக்குச் சொற்களுடனும் செதுக்கி,
கவிதைகளை ஆழப்படுத்தும் விதம் என்றும்
பேசக்கூடியது. கவிதைகளின் வீச்சை
பெருவெளிகளையும் தாண்டிச் செல்லும் வழிகளை மிக
எளிதாகக் கடந்திடக் கையாளும் உத்தி, மனோதிடம்
ஜமீலிடம் விரவிக் கிடக்கின்றன.
வண்ணத்துப் பூச்சிகள் பூவிதழ்களைத் கிளறும் விதம்
போல் மிக நுட்பமாகச் சொற்களைக் கொண்டு
கவிதைக்குள் மேய்விடுவது அற்புதமானது.
வெறும் மாயவெளிக்குள் தன்னை
அடையாளப்படுத்திக் கொள்ளாத ஜமீல் உண்மைக்கும்
புனைவுக்குமிடையில் கவிதைகளோடு
விளையாடுகிறார் என்பேன்

••

- டீன் கபூர்

அட்டை வடிவமைப்பு : [illegible]

IKR 600

புதுப் புனைவு

ISBN 978-624-98763-3-0

9 786249 876330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org